ஹட்டன் வலயக் கல்விப் பணிமனை

கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்)

பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு - 2020

தமிழ் 72 T - I



ஆலோசனையும் வழிகாட்டலும்

திரு.P.ஸ்ரீதரன்

கல்விப் பணிப்பாளர் ~ வலயக் கல்விப் பணிமனை, ஹட்டன்

நிகழ்ச்சித்திட்ட மேற்பார்வை

திரு. ஸ்டாலின் சிவஞானஜோதி

ஆசிரிய ஆலோசகர் (தமிழ்) ~ வலயக் கல்விப் பணிமனை, ஹட்டன்

கருத்துரங்கு இணைப்பாளர்

திரு.D.கணேசன்

ஆசிரியர் ~ நோர்வூட் த.ம.வி

-வீழ்வது நாமாயினும் வாழ்வது தமிழாகட்டும்-

www.ksedu.lk

வலயக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

எமது வலயத்தின் க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களின் பெறுபேற்றின் உயர்வுக்காய் கடந்த காலங்களில் உழைத்த அதிபர் ஆசிரியர்களை வாழ்த்துவதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

இவ்வருடம் இலங்கை திருநாடு முழுவதுமாக உயர்தரப்பரீட்சை எழுத இருக்கும் மாணவர்களுக்கு நாட்டின் அசாதாரண சூழ்நிலை பெறும் சவாலாக அமைகிறது. இந்நிலையில் எமது வலயத்தின் உயர்தர கலைப்பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவினை உயர் நிலைக்கு கொண்டு வரும் நோக்காகவும் இவ்வருட கலைப்பிரிவின் பெறுபேற்று வீதத்தை அதிகரிக்கும் சிந்தனையோடும் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய மலை நாட்டின் வாழ்க்கைத் தரமானது மாணவர்களின் கல்வியில் தான் பெருமளவில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகவே எம் மாணவச் செல்வங்கள் எம் சமுதாயத்தின் முன்னேற்றத்திலும் உயர்விலும் நற்பெயரை காப்பாற்றத் தக்க வகையில் இனி வரும் காலத்தில் செயற்பட வேண்டும்.

எமது மாணவர்களை எதிர்கால தொழிநுட்ப உலகில் தன்னிச்சையான, ஆளுமையும் செயற்றிறனும் மிக்கவராக நிலை நிறுத்த பாடசாலை அதிபர்களிடமும் தமிழ் பாடத்தை கற்பிக்கின்ற ஆசிரியர்களிடமும் மேலான அர்பணிப்பை எதிர்ப்பார்க்கிறேன்.

இச்செயற்பாட்டை வலயக் கல்வி பணிமனை நிதி உதவியின் ஊடாக ஏற்பாடு செய்து இருக்கின்ற தமிழ் பாட ஆசிரிய குழுவினருக்கும் இச்செயற்பாட்டில் பங்குபற்றுகின்ற அருமை மாணவர்களுக்கும் வாழ்த்து கூறுவதுடன் இச்செயற்பாடு சிறப்பாக நடைபெற பிரார்த்திக்கின்றேன்.

P.ஸ்ரீதரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்விப் பணிமனை,
ஹட்டன்.

எமது பணிக்கூற்று **(Mission)**

தேசிய குறிக்கோளை அடையும் முகமாக திட்டமிட்ட முறையில் பாடசாலையினதும் கல்விச் சமூகத்தினதும் தேவைகளை நிறைவேற்றுவதுடன் சமூகத்தின் கல்வி கலாசார தேவைகளுக்கு ஏற்ப சிறப்பான உயர் தேர்ச்சிகளை அடையக்கூடியதான கற்றல் கற்பித்தலை மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் நாட்டை கட்டியெழுப்பக் கூடிய ஒற்றுமையும் ஒழுக்கமும் உள்ள கற்றல் சமூகத்தை எமது வலயத்தில் உருவாக்கல்.

தூர நோக்கு **(Vision)**

தரமான கல்வியை வழங்குவதன் மூலம் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லக்கூடிய பூரண அபிவிருத்தியடைந்த பிரஜைகளை உருவாக்குதல்.

இணைப்பாளரின் செய்தி

கடந்த காலத்தில் ஹட்டன் கல்வி வலயத்தின் க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர் தரத்தின் கற்றல் பெறுபேறுகள் சொல்லிக் கொள்ள கூடிய வகையில் அமைய பெற்றிருப்பது யாவரும் அறிந்ததே.

இத்தகையதொரு மாற்றத்திற்கு வலயக்கல்விப் பணிமனையின் கல்விப் பணிப்பாளர் மதிப்பிற்குரிய திரு.P.ஸ்ரீதரன் அவர்களின் அயராத உழைப்பும் செயற்றிறனும் சமுதாயம் நோக்கிய ஆழமான பார்வையும் இன்றியமையாதது என்பது தெளிவு.

இவ்வாண்டிலும் கூட க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் பெறுபேற்றை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்காக அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடி விஷேட செயற்றிட்டம் ஒன்றை தயாரித்து அதனை நடைமுறைப்படுத்த குறிப்பிட்ட தொகை நிதியை எமக்கு வழங்கியமையை இட்டு மகிழ்கிறோம்.

கலைப்பிரிவின் பெறுபேற்றை உயர்த்தும் நோக்கில் தமிழ் பாடத்தை கற்பிக்கின்ற ஆசிரியர்கள் அனைவரும் ஒரே குடும்பமாக இணைந்து செயற்பட்டு, இதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி உள்ளனர். அத்துடன் ஆசிரிய ஆலோசகர்கள், ஓய்வு பெற்ற ஆலோசகர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வழிகாட்டலும் இன்றியமையாதது.

இவ்வாறு அனைவரது முயற்சியாலும் அயராத உழைப்பினாலும் தயாரிக்கப்பட்ட இக்கையேட்டினை பெற்று தமிழ் பாட ஆசிரியர்கள் தரும் விளக்கத்துடன் எதிர்வரும் உயர் தரப்பரிட்சையில் வெற்றி பெற வேண்டும் என மாணவர்களை வாழ்த்துவதுடன் இந்நிகழ்ச்சி திட்டத்திற்கு சகல வழிகளிலும் முழுமையான பங்களிப்புகளை நல்கிய அனைவருக்கும் நன்றி உரித்தாகட்டும்!

தே.கணேசன்,
செயற்றிட்ட இணைப்பாளர்,
ஆசிரியர்,
நோர்வூட் த.ம.வி,



www.ikodu.lk

கருத்தரங்கின் விரிவுரையாளர் விபரம்

விரிவுரையாளர் மேற்பார்வை

Dr.M. ரூபவதனன்
சிரேஸ்ட விரிவுரையாளர் – ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், இலங்கை

Dr.S. சுனேஸ்வரன்
சிரேஸ்ட ஆசிரியர் வீரகத்திப்பிள்ளை தமிழ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்

ஹட்டன் கல்வி வலய விரிவுரையாளர்கள்

திரு. S. தியாகராஜா

திரு. S. துவச்செல்வம்

திரு.P. சர்க்கஸ்நாதன்

திரு. V. கணேசலிங்கம்

திரு. V. சந்திரமோகன்

திரு. K. ரஞ்சித்குமார்

திரு. சிவனுமனோகரன்

திருமதி.P. ஜெயரூபினி

திருமதி. M. ராமேஸ்வரி

திருமதி. S. ஜெயப்பிரியா

வருகை விரிவுரையாளர்கள்

திரு. M. மதன்

திரு. M. துஸ்லிம் சியாத்

திரு.W. ஜெயசீலன்



www.ikeau.lk

தமிழ் - I

வினா இல : 01. அ. (சங்கப்பாடல் – 12 புள்ளிகள்) கட்டாய வினா

01. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே.

இளமை பாரார்...
கன்று தன் பயமுலை...
பூ வொடு புரையும்...
வாரல் எம் சேரி...
விளையாடு ஆயமொடு... (2019)
படுமழை பொழிந்த...
நகுதக் கனரே...
அறுகுளத்து உகுத்தும்...
ஒரு நாள் செல்லலம்...

வினாத்தொகுதி: 01

(i) இச் செய்யுளின் பேசுபொருளை (துறை) குறிப்பிடுக.
(ii) இச்செய்யுளின் பொருளை சிதைவின்றி எழுதுக.
(iii) தலைவியை விட்டு பிரிதல் அறமன்று எனும் கருத்து தொணிக்குமாற்றினை எடுத்துக்காட்டுக.

வினாத்தொகுதி: 02

(i) பாடலில் கையாளப்பட்டுள்ள உவமை அணியினை எடுத்து விளக்குக.
(ii) தலைவனின் மன நிலையினை எடுத்துக்காட்டுக.
(iii) பாடலில் கையாளப்பட்டடுள்ள முதல், கரு, உரிகளை எடுத்துக்காட்டுக

வினாத்தொகுதி: 03

(i) தோழியின் மதிநுட்பம் இப்பாடலில் எவ்வாறு துலக்கம் பெறுகின்றதெனக் குறிப்பிடுக.
(ii) பாடலில் இறைச்சிப் பொருள் விளக்கப்பட்டுள்ளவாற்றை எடுத்துக்காட்டுக.
(iii) இப்பாடலில் வெளிப்படும் சங்க இலக்கியப் பண்புகளை எடுத்துக்காட்டுக.

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

www.lkedu.lk

www.lkedu.lk

02. **(அ) நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்**
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதைத்தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
தென்னழல் வாழ்நர் செந்நிற காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்கடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே.

<u>வினாத்தொகுதி: 01</u>

(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக

நகுதகக்னர்	உளையக் கூறுதல்
மீக்கூறுநர்	சிறுசொல்

(iii) பாண்டியன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ் செழியனை பகைத்த அரசர்கள் இழிவாகக் கூறிய வார்த்தைகள் யாவை?

<u>வினாத்தொகுதி: 02</u>

(i) இப்பாடலில் புலவர் வெளிப்படுத்த விளைந்த விடயத்தைக் குறிப்பிட்டு விளக்குக.

(ii) பாடல் வெளிப்படுத்தும் விழுமியக்கருத்துக்கள் யாவை?

(iii) தலையாலங் கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய வஞ்சின வார்த்தைகள் யாவை?

<u>வினாத்தொகுதி: 03</u>

(i) ''ஓர் அரசனை இழிவுபடுத்தும் கீழ்மை உணர்வுகள்'' என நெடுஞ்செழியனின் உள்ளத்தில் ஊறி நின்றவை யாவை?

(ii) அரசருக்கு உரியதாகக் கூறப்படும் சிறப்புகள் தொடர்பாக இப்பாடலில் வெளிப்படும் அம்சங்கள் யாவை?

(iii) இப்பாடலில் வெளிப்படும் சங்ககால புறத்திணை மரபுகளை எடுத்துக்காட்டுக.

<u>வினாத்தொகுதி: 04</u>

(i) இப்பாடலில் உள்ள மேல்வரும் சொற்களின் பொருள்களை குறிப்பிடுக.

சமம்	புரப்போர்
நிலைஇய	புன்கண்

(ii) பாடலில் வெளிப்படும் சங்ககாலத்து பண்பாட்டு அம்சங்கள் என நீர் கருதுபவை யாவை?

(iii) தலையாலங் கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் தன்மான உணர்வும், வீரமும் வெளிப்படுத்தும் விதத்தினை எடுத்துக்காட்டுக.

www.ikedu.lk

www.lkedu.lk

3. **(அ) வாரலெஞ் சேரி தாரனீன் றாரே**
அலரா கின்றாம் பெரும காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொரு பிணித்த
ஏந்துகோட் டியானைச் சேந்தன் றந்தை
அரியலம் புகவினங் கோட்டு வேட்டை
நிரைய வொள்வா ளிளையர் பெருமகன்
அழிசி யார்க்கா டன்னவிவள்
பழிதீர் மாணலம் தொலைவன் கண்டே.

<u>வினாத்தொகுதி: 01</u>

(i) இப்பாடல் இடம்பெறும் துறையை விளக்கக.
(ii) இப்பாடலூடாக தோழி, தலைவனுக்கு உரைக்கும் செய்திகள் யாவை?
(iii) இச் செய்யுளில் வெளிப்படும் பழந்தமிழ்கால இலக்கிய மரபுகளைக் குறிப்பிடுக.

<u>வினாத்தொகுதி: 02</u>

(i) இப்பாடலின் பொருளை சிதைவின்றி இக்கால உரைநடையில் எழுதுக.
(ii) இப்பாடலில் கையாளப்பட்டுள்ள உவமை அணிகளை எடுத்துகாட்டுக.
(iii) இப்பாடலில் காவிரி ஆற்றினதும் சோழநாட்டினதும் வளம் எடுத்துகாட்டப்பட்டவாற்றைத் துலக்குக.

<u>வினாத்தொகுதி: 03</u>

(i) இப்பாடலில் கவிஞர் கூற விளைந்த பேசுபொருளை விளக்குக.
(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெவ் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.
சேரி
அலர்
அரியல்
நிரையம்
(iii) இப்பாடலில் பரணரால் கையாளப்பட்ட உத்திகளை எடுத்து விளக்குக.

<u>வினாத்தொகுதி: 04</u>

(i) இப்பாடலில் இடம் பெறும் உள்ளுறை உவமத்தை எடுத்துகாட்டுக.
(ii) அழிசி, சேந்தன் ஆகிய மன்னர்கள் பற்றி இப்பாடலில் குறிப்பிடப்பட்ட செய்திகளை எடுத்துகாட்டுக.
(iii) இச்செய்யுள் புலப்படுத்தும் சங்ககால பண்பாடுகளை எடுத்துக்காட்டுக.

<u>வினாத்தொகுதி: 05</u>

(i) பாடலில் கையாளப்பட்டுள்ள முதல், கரு, உரிகளை எடுத்துக்காட்டுக.
(ii) பாடலில் கையாளப்பட்ட திணை மயக்கம் யாதெனக் குறிப்பிட்டு விளக்குக.
(iii) காவிரிப் பலராடு பெருந்துறை, மருதொடு பிணித்த ஏந்துகோட்டி யானை எனும் தொடர்கள் புலப்படுத்தும் உட்கருத்துக்களை இனங்கண்டு விளக்குக.

www.ikeou.lk

4. **(அ) அறு குளத்து உகுத்தும், அகல் வயல் பொழிந்தும்,**
உறுமிடத்து உதவாது உவர் நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரி போலக்,
கடாஅ யானைக் கழல் கால் பேகன்
கொடை மடல் படுதல் அல்லது,
படை மடல் படான், பிறர் படை மயக்குறினே.

<u>வினாத்தொகுதி: 01</u>

(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.
(ii) இப்பாடலின் பொருளை சிதைவின்றி இக்கால உரைநடையில் எழுதுக.
(iii) இப்பாடலில் வெளிப்படும் பேகமன்னனின் குணவியல்புகளை எடுத்துக்காட்டுக.

<u>வினாத்தொகுதி: 02</u>

(i) இப்பாடல் பாடப்பட்ட பின்னணியை குறிப்பிடுக.
(ii) இப்பாடலில் புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயங்கள் யாவை? விளக்குக.
(iii) இப்பாடலில் புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயங்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன?

<u>வினாத்தொகுதி: 03</u>

(i) இப்பாடலில் கொடைமடம்படுதல் என்பதனால் கருதப்படுவது யாது?
(ii) பாடப்பட்ட பேகன் மன்னனின் கொடைச்சிறப்பு இப்பாடலில் எவ்வாறு துலக்கம் பெறுகின்றது?
(iii) இப்பாடலில் கையாளப்பட்ட உவமை அணியின் சிறப்பினை எடுத்துகாட்டுக.

<u>வினாத்தொகுதி: 04</u>

(i) இப்பாடலில் படை மடல் படுதல் என்பதனால் கருதப்படுவது யாது?
(ii) வரையா மரபின் மாரி போல... பேகன் எனும் தொடர் ஊடாக வெளிப்படுத்தப்படும் செய்தியைக் குறிப்பிடுக.
(iii) பாடல் வெளிப்படுத்தும் புறத்திணைப் பண்புகளைக் குறிப்பிடுக.

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

www.lkedu.lk

வினா இல : 01. ஆ. (தேர்ந்த செய்யுள் – 12 புள்ளிகள்) கட்டாய வினா

குகப்படலம்
தேம்பாவணி
சிலப்பதிகாரம்
மணிமேகலை
காரணமாலை
கோயில் திருப்பதிகம்
அமலன் ஆதிபிரான்

(1) கற்காணுந் தின்மையான் கரைகாணாக் காதலான்
அற்காணி கண்டனைய அழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோண் மழைகாணு மணிநிறத்தாய்
நிற்காணு முள்ளத்தா னெறியெதிர்நின் றனனென்றான்.

(i) இச்செய்யுளின் பொருளை சிதைவின்றி எழுதுக.

(ii) இச்செய்யுளில் கையாளப்பட்டுள்ள உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(iii) இச்செய்யுளின் வாயிலாக விளங்கிக் கொள்ளக் கூடியவை யாவை?

www.lkedu.lk

(2) நாலிரண்டு ஆய கோடி நவையில் நாவாய்கண் மீதாச்
சேல் திரண்டனைய ஆய கதியோடு நதியிற் சென்ற
பால் திரண்டனைய மெய்ய பயந்திரண்டனைய நெஞ்ச
கால்திரண்டனைய கால் கடுநடைக் கலினப் பாய்மா

(i) இப்பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தினை தெளிவுப்படுத்துக.

(ii) இப்பாடல் கம்பன் வெளிப்படுத்த விளைந்த கருத்து யாது?

(iii) இப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள அணிகளை விளக்குக.

www.lkedu.lk

(3) தும்பியும் மாவும் மிடைந்த பெரும் படை சூழ்வாரும்,
வம்பு இயல்தார் இவர் வாள் வலி கங்கை கடந்து அன்றோ?
வெம்பிய வேடர் உளீர்! துறை ஓடம் விலக்கீரோ?
நம்பி முன்னே, இனி நம் உயிர் மாய்வ துநன்று அன்றோ?

(i) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தை விளக்குக?
(ii) குகனது வார்த்தைகளினூடாக வெளிப்படும் அவனது வீர ஆற்றலை விளக்குக?
(iii) ராமன் மீதான குகனின் அன்பு வெளிப்படுமாற்றினை விளக்குக.

(4) ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் யோவாரோ
வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ
ஏழ்மை வேடன் இறந்திலன் என்று எனை ஏசாரோ

(i) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.
(ii) தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ அவ்வடிகள் புலப்படுத்துவது யாது?
(iii) கங்கை பரதனது படை ஆகியவற்றின் சிறப்பு எவ்வாறு சூளுரைக்கின்றான்.

(5) கங்கை இரு கரை உடையான் கணக்கு இறந்த நாவாயான்
உங்கள் குலத்தினி நாதற்கு உயிர்த்துணைவன் உயர்தோளான்
வெங்கரியின் ஏறு அனையான் வில் பிடித்த வேலையினான்
கொங்கு அலரும் தண் தார்க் குகன் என்னும் குறி உடையான்.

(i) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.
(ii) இப்பாடலில் இடம்பெறும் அணிகளை இனங்காண்க.
(iii) சுமந்திரன் பரதனுக்குக் கூறிய குகனின் சிறப்புக்கள் யாவை?

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

www.ikeou.lk

வினா இல : 02. கவிதைப் பகுதி– 16 புள்ளிகள் **கட்டாய வினா**

01. அ பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

ஏதொ அவதியில் ஏகுகிறீர்,
ஏனப்பா,
நீர்தான் உலகு நிலைமாறி
பாதாளத்
தாழ விழாமல் அதன் வாழ்வைக் காப்பவரோ?
வாழி என் தாழ்மை வணக்கங்கள்!

ஆள் சுருளும்
வெளியிலிலே
நீர் போகும் வீதி நடைப் பாதையிலே
உய்யும் வகை தெரியா ஓர்மனிதன்.
கையில்தான்,
தூங்குகின்றான் போலக் கிடக்கின்றான்.
துன்புறுத்தி வீங்கும் பசியால் விழுந்தானோ?

ஆங்கயலிற்
கோத்தவரும் காகத்தைப் பாரும்
குறை உயிரோ,
சேத்த உடலோ - தெரியவில்லை.

சற்றெனினும்
நில்லாது, நெஞ்சில் நெகிழ்வேதும் காணாது,
சில்லறையில் ஒன்றைச் செருக்கோடு
செல்லுங்கால்
வீசிவிடுதல் விரும்பினீர்.

வேண்டாம், ஓய்
கூசும் அவமதிக்கும் கொள்கையேன்
ஆசைமிகு
ஆதலினால், காசு கணீரென்றிட அதிரும்
காதுடையான்.
அன்னோ கடுந்தூ க்கம்
பாதியிலே கெட்டுவிடக் கூடும்.
கெடுக்காதீர் பாவம், இம்
மட்டும் புவியை மறந்திருந்தான்.

கிட்டப்போய் மெல்லக் குனிந்திடுக.
இல்லையெனில் உம்பாட்டில்
செல்க.
இதுவே சிறப்பு.

குயிற்பாட்டு (2019)
கண்ணன் பாட்டு
பாஞ்சாலி சபதம்
பெண் விடுதலை
பாரதியார்
ஈழநாட்டுக் குறம்
உதயசூரியன்
மானிட சக்தி
கவிஞன்
தொண்டு
எல்லாம் உமதே
வீசாதீர்

I. இக்கவிதையின் மையக்கருத்தும் எடுத்துரைக்கும் முறையும்
II. இதில் இடம்பெறும் பிச்சைக்காரன் பற்றிய சித்தரிப்பு
III. வீசாதீர் என்ற தலைப்பின் பொருத்தப்பாடு
IV. கவிஞர் சமூகத்தில் எதிர்பார்க்கும் மாற்றம்
V. பிச்சைக்காரன் மீது கவிஞர் கொண்ட அனுதாபம்
VI. மனிதர்களின் அலட்சியம் இக்கவிதையில் வெளிப்படும் விதம்
VII. மஹாகவியின் கவித்துவ ஆற்றல்

www.lkedu.lk

1.ஈழநாட்டுக்குறம்

I. இக்கவிதையில் கூறப்படும் ஈழநாட்டின் வளங்கள்
II. ஈழத்திருநாட்டின் மீது கவிஞர் கொண்டுள்ள ஈடுபாடு
III. கவிஞரின் கற்பனை ஆற்றல் வெளிப்படுமாறு
IV. இக்கவிதையில் இழையோடும் அணிகள்

2.பாரதியார்

I. பாரதியார் பெருமைகளை வெளிப்படத்த கவிஞர் கையாண்ட உத்திகள்
II. பாரதிமேல் பிறப்புலவர்கள் கொண்டுள்ள ஈடுபாடு
III. தமிழ்க்கவிதை மரபில் பாரதியாரின் முக்கியத்துவம்
IV. இந்த நறுமலர் கூம்பிடுமோ இதன் இன்பம் என்றாயினும் குன்றிடுமோ என்ற அடிகளில் விளங்கி கொள்ளத்தக்கது.

3.கவிஞர்

I. நல்லதொரு கவிதையில் இருக்கவேண்டிய பண்புகளாவன.
II. உண்மைக் கவிஞனின் பண்பகள்
III. சிறப்பற்ற கவிஞர்கள் பற்றிக் கூறப்படுவன.
IV. இக்கவிதையில் காணப்படும் அணிகள்

5.எல்லாம் உமதே

I. தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் அவலங்கள்
II. முதலாளித்தவத்தின் மகிழ்வு பற்றிய பதிவு
III. இக்கவிதையில் ஊடுறுவியுள்ள உணர்ச்சிகள்
IV. கவிதையின் எடுத்துரைப்பு உத்திகள்
V. தொழிலாளர் புரட்சிக்கு இக்கவிதை வித்திடுவதாக அமையுமாறு
VI. இக்கவிஞரின் உணர்வுகள் தொழிலாளர்களின் எழுச்சிக்காக எழுகின்றன - ஆராய்க.

6.தொண்டு

I. பறவைகள், விலங்குகளின் செயற்பாடுகள்
II. சுரண்டலுக்கு எதிராக போராட வேண்டுமென சிந்தனை
III. கவிஞர் கையாண்டுள்ள உத்திகள்
IV. கவிதை தலைப்பின் பொருத்தப்பாடு
V. கவிஞரின் சொல்லாட்சி வெளிப்படுத்தும் உணர்வுகள்
VI. சூழல்சார் வர்ணனைகளின் வெளிப்பாடு
VII. இக்கவிதையில் கவிஞர் பயன்படுத்திய குறியீடுகள்

6.மானிடசக்தி

I. இக்கவிதையில் மானுடம் வெளிப்படும் விதம்
II. இதன் இலக்கிய சிறப்புகள்
III. வெளிப்படும் அணிசிறப்புகள்

www.lkedu.lk

வினா இல : 02. கவிதைப் பகுதி– 16 புள்ளிகள் கட்டாய வினா

மேலதிக வினாக்கள்

www.lkedu.lk

வினா இல : 03. திருக்குறள் – 20 புள்ளிகள்) தெரிவு வினா

(1) அறிவுடைமை

1) அறிவுடைமை எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுப்படுத்துக.

அ. அறிவின் சிறப்பு :- (குறள் - 01)

அரசிற்கு அறிவு என்பது அழிவு வராமல் காக்கும் கருவி.
பகைவரால் அழிக்க முடியாத அரண்.

ஆ. அறிவினது இலக்கணம் (குறள் 2-6)

நன்மை தீமைகளை ஆராய்ந்து நல்வழிச் செய்ய வைப்பது (குறள் 2)
கேட்பவற்றுள் மெய்ப்பொருளை காண வைப்பது (குறள் 3)
தனது கருத்தை எளிமையாகச் சொல்வதுடன் பிறரது நுட்பமான கருத்தினை அறிய வைப்பது (குறள் 4)
உயர்ந்தோருடன் நட்புக் கொண்டு என்றும் ஒரே விதமான அன்பு கொண்டிருக்க உதவும். (குறள் 5)
உலகத்தோடு பொருந்தி நடக்க வைப்பது (குறள் 6)

இ. அறிவுடையாரது இலக்கணம் (குறள் 7,8)

பின்னர் வரப்போவதை முன்னரே அறிந்து நடப்பார்.
அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சி நடப்பார்.

ஈ. அறிவுடையார்க்கு துன்பம் ஏற்படாமை (குறள் 9)

பின்னர் வரப்போவதை முன்னரே அறியக் கூடிய அறிவுடையார்க்கு எத்தகைய துன்பமும் ஏற்படாது.

உ. அறிவுடையாரது சிறப்பும் இல்லாரது இழிவும். (குறள் 10)

அறிவுள்ளவரே எல்லாம் உடையவர்.

(2) குற்றங்கடிதல்

அ. குற்றங்கடிதல்

அரசானானவன் தன்னிடத்திலே தவறுகள் ஏற்படாது நீக்கிக் கொள்ளுதலாகும். அதாவது காமம், வெகுளி, கடுப்பற்றுள்ளம், மானம், உவகை மதம் ஆகிய ஆறு பகைகளையும் நீற்குதலாகும்.

ஆ. அதிகார வைபப்பு முறையின் பொருத்தபாடு

அறிவுடைமையாலேயே குற்றங்களை நீக்க முடியும் என்பதால் அறிவுடைமைக்கு அடுத்ததாக குற்றங்கடிதல் வைக்கப்பட்டுள்ளது.

இ. குற்றங்களாக கருதப்படுபவை (குறள் 1,2)

செல்வக் களிப்பு, கோபம், காமம் (குறள் 1)
பொருள் கொடாமை, சிறப்பில்லாத மானம், தகுதியில்லாத மகிழ்ச்சி (2).

ஈ. பொது வகையால் குற்றம் நீங்கும் வழிகள். (குறள் 3-6)

பெரியோர்கள் தமது சிறுகுற்றத்தையும் பெரிதாக எண்ணி குற்றம் வராமல் காத்துக்கொள்ளல் (குறள் 3)
குற்றம், முடிவைத் தருவதால் தன்னிடத்தில் குற்றம் வராமல் காத்தல் (குறள் 4)
குற்றம் தனக்கு வருமுன் காத்தல் (குறள் 5)
பிறர் குற்றம் காண்பதற்கு மன்னர் தன்குற்றம் காணல் (குறள் 6)

உ. சிறப்பு வகையால் குற்றம் நீங்கும் வழிகள் (குறள் 7-10)

உலோபத் தனத்தை நீக்கிக் கொள்ளல் (குறள் 7-8)
தன்னைப் புகழாமையும், நன்மையற்ற செயல்களை செய்யாமையும் (குறள் 9)
தான் விரும்பும் விடயங்களை மற்றையவர் அறியாமல் பாதுகாத்தல் (10)

உ. அணிப்பயன்பாடு :- உவமையணி

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை ஏரி முன்னர் வைத்தாறு போலக் கெடும்.
உவமானம் - நெருப்பின் முன்பாகவுள்ள வைக்கோல்
உவமேயம் - குற்றம் வருமுன் காவாதவன் வாழ்க்கை
பொதுத்தன்மை - அழிதல்
உருபு - போல

(3) பெரியோரைத் துணைக்கோடல்

1) பெரியாரைத் துணைக்கோடல் எனும் அதிகாரத்தில் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ. பெரியாரைத் துணைக்கோடல் என்பதன் பொருள்

தன்னை நல்வழிப்படுத்தும் பெரியாரைத் துணையாகக் கொள்ளுதல்.

ஆ. அதிகார வைப்பின் பொருத்தப்பாடு

குற்றங்கள் எவையும் தன்னிடத்தில் நிகழாமல் கண்டிக்கும் அரசன் தீய நெறிகளிலிருந்து விலகி நன்னெறியில் செல்வதற்கு பேரறிவுடைய பெரியாரை தனக்கு துணையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதனால் குற்றங்கடிதலின் பின் இவ்வதிகாரம் வைக்கப்பட்டது.

இ. பெரியாரது இலக்கணமும் அவரை துணையாகக் கொள்வதன் அவசியமும் (குறள் 1,2)

அரசன் அறம் அறிந்தவரின் நட்பை கொள்ளல் வேண்டும் (குறள் 1)
அடைந்த துன்பம் நீங்கவும் இனி வராமல் நீக்கவும் அது உதவும் (குறள் 2)

ஈ. பெரியாரை துணைகோடலின் சிறப்பு (குறள் 3-5)

அரசர்க்குரிய பேறுகள் எல்லாவற்றிலும் அரியது (3)
எல்லா வலிமைகளிலும் சிறந்த வலிமை உடையது. (4)
அரசன் அமைச்சரையே கண்ணாகக் கொண்டு ஒழுகுவதால் இத்தகைய வழிகளை கூறும் அமைச்சரை துணையாகக் கொள்ளல் (5)

உ. பெரியாரைத் துணைகோடலின் பயன்கள் (குறள் 6,7)

பகைவரால் செய்யத்தக்கது ஒன்றுமில்லை (குறள் 7)
அழிக்கத்தக்க ஆற்றல் கொண்ட பகைவர் யாருமில்லை (குறள் 7)

ஊ. பெரியாரிடம் நட்பைக் கொள்ளாவிடத்து ஏற்படும் குற்றம் (குறள் 8-10)

கெடுக்கும் பகைவர் இல்லாமல் தானாகவே அழிந்து போவான் (குறள் 80
மன்னன் நிலையான அரசு செய்ய முடியாது (குறள் 9)
மன்னன் பெரியாரோடு நட்பினை கொள்ளாது ஒழித்தல் தான் தனியாளாய் பலருடைய பகையை கொள்ளவதை விட பத்து மடங்கு தீமையுடையது. (குறள் 10)

எ. அணிப்பயன்பாடு.

<u>உவமையணி</u>

முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை மதலையாம் சார்பிலார்க்கு இல்லை நிலை.
உவமானம் : மூலதனம் இல்லாதவர் வருமானம்.
உவமேயம் : பெரியாரை துணைக் கொள்ளாதவருக்கு வாழ்வு இல்லை.
பொதுத்தன்மை : இல்லாது போதல்.

<u>உருவக அணி</u>

சூழ்வார் கண்ணாக ஒழுகலான்.

(4) சிற்றினம் சேராமை.

அ. சிற்றினம் சேராமை எனப்படுவது

நற்பண்புகள் இல்லாத சிறியோருடன் சேராமை.

www.ikedu.lk

ஆ. அதிகார வைப்பு முறையின் பொருத்தப்பாடு.

பாவச் செயல்களை செய்கின்ற சிற்றினத்தவர்களோடு சேராது இருக்க வேண்டுமாயின் பெரியார்களுடைய துணையை நாடுவது இன்றியமையாததாகும். எனவே பெரியாரைத் துணைக்கோடலின் பின் சிற்றினம் சேராமை வைக்கப்பட்டுள்ளது.

இ. சிற்றினம் பெரியோர்க்கு ஆகாது/ சிறியோருடன் சேர்வது ஆகாது (குறள் 01)

பெரியோர் கீழ் மக்களிடத்து சேரார். ஆனால் சிறியோர் சேர்வார் (குறள் 01)

ஈ. சிற்றினம் சேராமைக்கான காரணங்கள் (குறள் 02)

சிறியோரது இயல்பால் பெரியோரது இயல்பும் மாறி விடும்.

உ. இனத்தோடு சேருதலின் முக்கியத்துவம் (குறள் 03)

ஒருவரது இயல்பினை அவர்கள் சேருகின்ற இனமே தீர்மானிக்கும்.

ஊ. இனத்தின் முக்கியத்துவம் (குறள் 4)

ஒருவர் சேருகின்ற இனமே அவரது அறிவினைத் தீர்மானிக்கும்.

எ. சிற்றினம் சேராமையின் சிறப்பு

நல்லியம் சேர்தலின் முக்கியத்துவம் (குறள் 5-9)

மனத்தூய்மையும் செயல் தூய்மையும் ஏற்படும்.
எல்லாம் நன்மையாகவே அமையும்.
நல்லவரோடு சேர்ந்தால் அனைத்துப் புகழையும் தரும்.
மனநலம் ஏற்படும்.
மறுபிறப்புப் பயன் வலிமையுடையது

ஏ. நல்லினத்தால் நன்மையும் தீயினத்தால் தீமையும் (குறள் - 10)

நல்லினத்தைப் போல் பெருந்துணை வேறில்லை. தியினத்தைப் போல் துன்பம் தரக்கூடியதும் வேறில்லை.

(5) தெரிந்த செயல் வகை.

அ. தெரிந்து செயல் வகை எனப்படுவது.

தான் செய்யும் செயல்களை ஆராய்ந்து செய்யும் தன்மை.

ஆ. அதிகார வைப்பு முறையின் பொருத்தப்பாடு.

சிற்றினத்தோடு சேராமல் பெரியாரின் துணையுடன் வினை செய்தால் அவ்வினையை சிறப்பாகச் செய்ய முடியும் என்பதால் சிற்றினம் சேராமைக்கு பின் தெரிந்த செயல் வகை வைக்கப்பட்டுள்ளது.

இ. செயற்றகு செயலும் செய்யும் முறையும் (குறள் 1,2)

செயலை செய்யும் போது உண்டாகும் ஆக்கம், அழிவு, பயன் என்பவற்றை ஆராய்ந்து பார்த்து செய்ய வேண்டும் (குறள் 1)
தக்க இனத்தவரோடு ஆராய்ந்து தேர்ந்து எண்ணிச் செய்ய வேண்டும் (குறள் 2)

ஈ. செய்யாது கைவிட வேண்டிய செயலும், கைவிடாது செய்தால் ஏற்படும் இழக்கும் (குறள் 3-5)

அடையவிருக்கும் செல்வத்தை நினைத்து அடைந்த செல்வத்தை இழுக்கும் செயலை செய்யக் கூடாது. (குறள் 3)
குற்றத்திற்கு பயப்படுபவர்கள் எதனையும் ஆராய்ந்து பார்த்து செய்தல் வேண்டும் (குறள் 4)
செயலின் வகைகளை ஆராயாமல் போருக்கு எழுவது பகைவரை போரில் நிலைக்க வைக்கும் வழியாகும். (குறள் 5)

உ. செய்ய வேண்டியவையும் செய்யக் கூடாதவையும் (குறள் 6)

ஒருவன் செய்யக் கூடாதவற்றை செய்தாலும் அழிவான் செய்யக்கூடியவற்றை செய்யாது விட்டாலும் அழிவான்.

ஊ.செயலை செய்வதற்குரிய உபாயமும் / உரிமையும் (7,10)

ஒரு செயலை செய்வதற்கு முன்னர் அச் செயலின் நன்மை தீமைகளை எண்ணி ஆராயந்து பின் மேற்கொள்ள வேண்டும். தொடங்கிய பின் எண்ணுவோம் என்பது குற்றமாகும்.
ஒரு செயலை செய்யத்தக்க வழியில் முயலாவிட்டால் பலர் நின்று காத்தும் குற்றத்தை ஏற்படுத்தும்.
அவரவர் எண்ணங்களை அறிந்து அதற்கேற்ப செயற்பட வேண்டும். அவ்வாறு செய்யாது விடின் நல்ல செயல்களிலும் குற்றம் உண்டாகிவிடும்.
மற்றவர் தம்மை இகழாத வகையில் தம் நிலைகேற்ப செயல் உபாயங்களை வகுத்துக் கொள்ளல் வேண்டும்.

(6) வலியறிதல்.

அ. வலியறிதல் எனப்படுவது.

அரசன் போருக்கு செல்ல மன்னர் தனதும் பகைவனதும் வலிமைகளை அறிதல்.

ஆ.அதிகார வைப்பு முறையின் பொருத்தப்பாடு.

தெரிந்து செயல்களை செய்யக்கூடியவனாலேயே வலியறிந்து செயற்பட முடியும் என்பதால் தெரிந்து செயல் வகைக்கு அடுத்ததாக வலியறிதல் வைக்கப்பட்டுள்ளது.

இ. வலிமையின் பகுதிகளும் அவற்றை அறிந்து போருக்கு செல்வோர் பயனும் (குறள் 01)

தன் செயலின் வலிமை, தனது வலிமை, பகைவரின் வலிமை, இருவருக்கும் துணையானவர்களின் வலிமை.
அனைத்து வலிகளையும் அறிந்து செயலில் நிலைத்து பகைமேல் செல்பவன் வெல்லுவான் (குறள் 2)

ஈ. தன் வலி அறியாததால் ஏற்படும் இழுக்கு (குறள் 3,4)

மனவூக்கம் காரணமாக தம்மை விட வலியவரோடு போரிட்டு இடையில் தோற்றம் (3)
அயல் வேந்தரை சேர்ந்து நடக்காமலும், தன் வலிமையையும் அறியாமல் தன்னை வியந்த அரசன் விரைவில் அழிந்து போதல்.

உ. மாற்றான் வலியும் அவன் துணை வலியும் அறியாத போது எற்படும் இழுக்க (5)

மயிலிறகு அதிகம் ஏற்றிய வண்டியின் அச்சு முறிந்து போவது பொல வலிமையற்ற பலரால் வல்லமையுடையவன் தோற்றம் போதல்.

ஊ.இனவலியை அறியாத போது எற்படும் இழுக்கு (குறள் 6)

மரத்தின் நுனிக்கொம்பில் ஏறி நிற்பவர் அதற்கு மேலும் போக முயன்றால் அது மரணத்தை ஏற்படுத்துவது போல பகைவர் மீது அளவறியாத செல்லும் மன்னன் தோற்பான்.

எ. பொருட்செல்வத்தின் வலியறிதல்/ பொருள் வலியறிதல் சிறப்பு (7-10)

தம்மிடமுள்ளவற்றை அறிந்து கொடை செய்ய வேண்டும்.
வருவாயைக் காட்டிலும் செலவு அதிகப்படாமல் இருத்தல் வேண்டும்.
தம் பொருளின் அளவை அறிந்து வாழ வேண்டும்.
இருக்கும் பொருளின் அளவை அறிந்து கொடை வழங்கல் வேண்டும்.

ஏ. அணிப்பயன்பாடு

பிறிதுற மொழிதல்/ ஒட்டணி
பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்
நுனிக்கொம்பர் ஏறினார் அ.்திறந்த தூக்கின் உயிர்க்கிறுகி யாகிவிடும்.

(7) தெரிந்து தெளிதல்.

அ. தெரிந்து தெளிதல் எனப்படுவது

தமது அமைச்சர் போன்றோரின் பிறப்புக்குணம், அறிவு ஆகியவற்றினை காட்சி கருத்து ஆகமம் ஆகிய அளவைகளினூடாக ஆராய்ந்தறிந்து தெளிதலாகும்.

ஆ. அதிகார வைப்பு முறையின் பொருத்தப்பாடு

வலி, காலம், இடம் ஆகியன அறிந்து பகைமேற் செல்வனுக்கு தனது செயல் நிறைவேறும் பொருட்டு தெரிந்து தெளிதல் தேவைப்படுகிறது. எனவே வலியறிதல் இடனிறிதலின் பின்பு தெரிந்து தெளிதல் எனும் அதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

இ. பொது வகையால் குணமும் குற்றமும் தெரிந்து குணமுடையாரை இனங்காணல் 1,2,3

அறம், பொருள் இன்பம், அச்சம் எனும் நான்கையும் ஆராய்ந்த பின் தொழிலுக்கு தேர்ந்தெடுத்தல்.
நற்குடியில் பிறந்து நற்குணம் கொண்டு பழிக்கு அஞ்சும் நாணமுடையவனை கொள்ளல்.
கற்றவரிடத்தும் அறியாமை இல்லாமையை அறிதல்.

ஈ. சிறப்பு வகையால் குணமுடையாரை இனங்கால் (4)

குணம், குற்றம் ஆகியவற்றை ஆராய்ந்து நல்லவன் கெட்டவனை அறிதல்.

உ. குற்றம் நாடுவதற்கான கருவி (5)

அவனது செயல்கள்

உ. தெளியப்படாதவரும் தெளிந்தால் ஏற்படும் இழுக்கும் (குறள் 6,7,8,9,10)

சுற்றமில்லாதவர்
அன்பு காரணமாக அறிவில்லாதவர்.
ஆராயாமல் நம்பித் தெளியக் கூடாது.
ஆராய்ந்து தெளிந்த பின் ஐயம் கொண்டதால் தீராத பழி ஏற்படும்.

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

www.lkedu.lk

வினா இல : 04. குகப்படலம்– 20 புள்ளிகள்) தெரிவு வினா

கட்டமைப்பு வினாக்கள்

1.குகப்படலத்தில், பரதனது படை கங்கைகரையை அடைந்தது முதல் குகன் படை திரட்டியது வரையான பகுதி

I. கங்கைக் கரையை அடைந்த பரதனது படைச்சிறப்பு
II. பரதனது படைகளைக் கண்ட குகனது சீற்றம்
III.குகன் தனது படைகளைத் தயார்படுத்தும் விதம்
IV. கையாளப்பட்டுள்ள அணிகளின் சிறப்பு

2.குகப்படலத்தில் குகன் தன்சேனைகளுக்கு கட்டளையிட்டது முதல் தன் படையினர் முன்னால் வீர ஆவேசத்துடன் பேசிய குகன் பரதனோடு போர் செய்யும் எண்ணத்தோடு வடகரையில் நிற்பது வரையான பகுதி

I. குகனுடைய வீரம் வெளிப்படுமாறு
II. ராமனிடத்தில் குகனுக்கிருந்த அன்பு
III.பரதன் போருக்கு எழுகிறான் என்று எண்ணிய குகன், பரதனை இகழ்ந்துரைக்கும் விதம்
IV. அணிக்கையாட்சி சிறபபு

3.குகப்படலத்தில் பரதன், கங்கையை கடத்துவிக்குமாறு குகன்பால் வேண்டுவது முதல் படைகளும் நகரமக்களும் கங்கையை கடந்தமை வரையிலான பகுதி

I. குகனது நாவாய்களின் தோற்ற பொலிவு
II. பரதனது சேனை கங்கையை கடந்த விதம்
III.மகளீர் ஓடத்தில் சென்ற காட்சி வர்ணனை
IV. உவமையணி கையாட்சி சிறப்பு

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

www.lkedu.lk

1. கம்பராமாயணம் குகப்படலத்தில் பரதனது படை கங்கைக் கரையை அடைந்தது முதல் குகன் படை திரட்டியது வரையிலான பகுதியை ஆதாரமாகக் கொண்டு கீழ் வருவனவற்றை விளக்குக.

அ) கங்கைக் கரையை அடைந்த பரதனது படைச்சிறப்பு
ஆ) பரதனது படைகளைக் கண்ட குகனது சீற்றம்
இ) குகன் தனது படைகளைத் தயார்ப்படுத்தும் விதம்
ஈ) கையாளப்பட்டுள்ள அணிகளின் சிறப்பு

அ) கங்கைக் கரையை அடைந்த பரதனது படைச்சிறப்பு

நாற்படைகளும் அடங்கும் வகையில், திரண்டு வந்த பரதனது படையால் கங்கைக் கரையில் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு பரதனது படையின் சிறப்பு எடுத்தக்காட்டுப்பட்டுள்ளது.
பெரிய அகன்ற நீர்வளத்தையுடைய கங்கை நீர், யானையின் மத நீர்ப் பெருக்கத்தால் ஏனைய உயிரினங்களுக்கு குடிப்பதற்கும், குளிப்பதற்கும் பயனற்றுப் போகும் வகையில் யானையினது பெருக்கம் காணப்பட்டது.

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

ஆ) குகனது சீற்றம்

வேட்டுவ குலத் தலைவனான குகன் மேலெழுந்த புழுதியைப் பார்த்தவனாய் எள்ளல் நகைப்புடன், கண்களில் தீப்பொறி பறக்க இராமனோடு போர் செய்வதற்காக இப்படை வந்துள்ளது என, எண்ணிச் சீற்றங் கொண்டான்.
கோப நெருப்புகனல் மூக்கிலிருந்து புகையாக வெளிவர வளைத்த புருவத்தை உடையவன் குகன். கொடிய யமனே திரிசூலத்துடன் நேரில் வந்தது போல குகன் சினங் கொண்டு காணப்படுதல். உடைவாளை அரையிற் கொண்டு கோபத்தினால் உதட்டைக் கடித்து, கடும் வார்த்தைகளைப் பேசுபவன் போர் வாத்தியங்களை உடையவன். போரில் பெருமை கொள்ளும் தோளையுடையவன். குகனது படைகள் வீரம் கொண்ட புலிகளாகவும் பரதனது படைகளை வெறும் எலிகளாகவும் கருதி ஆரவாரம் செய்து தனது படையின் வீரர்களை போரிற்கு தயார்ப்படுத்தும் சிறந்த தலைவனாகவும் குகன் காணப்பட்டான்.
ஊழிக் காலத்தில் இடியோடு கூடிய மேகமும் கரிய கடலும் பேரொளியோடு எழுவதைப்போல படை பலத்தை உடையவனாகக் குகன் காணப்பட்டான்.

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

வேடர்களின் வீரத்தை எடுத்துக்காட்டி நம்பிக்கையூட்டல்

பரதன் அண்ணனாகிய இராமனையும் வலிமையான இலக்குவணனைப் பற்றியும் எண்ணாவிட்டாலும் இடையில் கங்கைக் கரையில் உள்ள எம்மை ஒரு பொருட்டாகக் கருதாது இகழ்ந்தது எங்ஙனம்? இவர்கள் எவ்வாறு கங்கையைக் கடக்க முடியும். வேடர்கள் நாம் செய்யும் எய்யும் அம்புகள் அரசர் மார்பைத் துளைத்து விடும் எனத் தன் வீரர்களுக்கு நம்பிக்கையூட்டினான்.

இராம இலட்சுமணரோடு குகன் நாடு செல்லாது கங்கையல் தரித்து நின்றது நலமாயிற்று. ஏனெனில் இன்று போர் செய்து இப்படையை அழிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது எனத் தன்னிலையை உணர்த்தி போர் கடமையை உணர்த்தினான்.

தவிர்க்கப்பட வேண்டிய வீடயங்களைக் கூறல்.

உக்கிரமான வேடர்களே நிர்த்துறையில் ஓடம் விடுவதை நிறுத்துங்கள். இராமனுக்குத் துன்பம் வருவதன் முன்னர் எம் உயிர் போரில் அழிந்து போவது நல்லதல்லவா? எனத் தன் வீரர்களையும் உள்வாங்கிக் கருத்துரைக்கும் பாங்கு காணப்படுகின்றது.

பரதனது படைகளை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துரைத்தல்.

குடல்கள் சிதைந்து அலைய வேண்டும்.
படைக் கலன்ககோடு இறக்க வேண்டும்.
மிகுதியாகக் காணப்படும் பிணக்குவியலைக் கங்காநதி இழுத்து கடலைத் தூர்த்து விட வேண்டும்.
தர்மத்தின் வடிவான இராமனுக்கு பூமியை மீட்டுக் கொடுக்க வேண்டும். அதனை வேடர்கள் மீட்டுக் கொடுத்தார்கள் என்ற பெருமையை அடைய வேண்டும்.

இது போன்ற வீர வசனங்களைப் பேசிக் குகன் படை வீரர்களைப் போரிற்குத் தயார்ப்படுத்தினான்.

ஈ) இப்பகுதியில் உவமை, உருவக, உயர்வு நவிற்சி அணிகள் கையாளப்பட்டுள்ளதைக் காணலாம்.

<u>உவமை அணி</u>

காவிரி நாடன்ன கழனி நாடு....	(பாடல் 01)
பாலை ஏய் நிறத்தொடு....	(பாடல் 04)
கடலின் நீர் சுமந்த மேகத்தை ஒப்புடை, அண்ணல்....	(பாடல் 06)
குளிப்புறும் புரவப் போர்விலான்	(பாடல் 07)
வள்ளுகிர்ப் புலியெலாம் ஒரு வழி புகுந்த போலவே....	(பாடல் 10)
அசனி மாமழை கருங்கடல் கிளிர்ந்த தன்ன	(பாடல் 11)

<u>உருவக அணி</u>

வெங்கரி மருத்தரு	(பாடல் 02)
சேனையாம் வேலை	(பாடல் 04)

<u>உயர்வு நவிற்சி அணி</u>

குதிரைப் படையிலிருந்து எழும் தூசி தேவலோகம் வரை செல்லுதல்.
யானையின் மத நீரால் அகன்ற கங்கை பயனற்றுப் போதல்.
கங்கை கடலைச் சென்றடைய முடியாதிருத்தல்.

2. கம்பரயாமாயணம் குகப்படலத்தில் 24-37 பாடல்களை ஆதாரமாகக் கொண்டு கீழ்வருவனவற்றிற்கு விடையளிக்குக.

அ) சுமந்திரனின் கூற்றின் வாயிலாக வெளிப்படும் குகனின் சிறப்புக்கள்

மலை போன்ற உறுதியான உடலை உடையவன்
இராமன் மீது எல்லையில்லா அன்புடையவன்.
கங்கையின் இரு கரைகளையும் தன் ஆட்சிப் பரப்புக்குள் கொண்டவன்.
அளவற்ற படகுகளை வைத்திருப்பவன்.

.....
.....
.....
.....
.....
.....

ஆ) பரதன் நிலை கண்ட குகனின் மனநிலை

சுமந்திரன் வார்த்தைகளைக் கேட்டு குகனைக் காண்பதற்காகச் சென்ற பரதனைக் கண்ணுற்ற குகனின் நிலை.

பரதனின் தோற்றம் (மரவுரியாடை, புழுதி படிந்த உடல், ஒளியிழந்த முகம், கல்லே கனியும் படியான முடிவற்ற துயரம், இராம இலட்சுமணரை ஒத்த தோற்றம்) கண்ட குகன் வில்லே சோர்ந்து விழும்படி விழுந்தான்.

இராமன் இருக்கும் திசை நோக்கி தவவேடம் பூண்டிருந்த பரதன் தொழுதமையைக் கண்டு இராமனுக்கு பிறந்த தம்பியர் இவனைக் கொல்லுதலாகிய பிழையைச் செய்வார்களோ எனத் திடுக்குற்றான்.

இ) பரதனின் குண நலப்பண்புகள்

ஆண் சிங்கத்தை ஒத்த வலிமையுடையவன்.

களங்கமில்லாத சிறந்த மனத்தினையுடையவன்

அண்ணனின் நண்பனை தானே சென்று அளவளாவ எண்ணுவதிலிருந்து அவனது உன்னத மனப்பாங்கு வெளிப்படுகின்றது.

வாடிச் சோர்ந்த திருமேனியையுடையவன்.

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

4. குகப்படலம் 44-53 பாடல்களை ஆதாரமாக்க கொண்டு கீழ்வருவனவற்றிற்கு விடையளிக்குக.

அ) குகனது நாவாய்களின் தோற்றப்பொலிவு

ஆ) பரதனது சேனை கங்கையைக் கடந்து விதம்

இ) உவமை அணிப்பயன்பாடு

அ) குகனது நாவாய்களின் தோற்றப்பொலிவு

பரதன் கங்கையைக் கடப்பதற்குக் கேட்ட போது வருகை தந்த குகனது நாவாய்கள்.

சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கைலாய வெள்ளி மலை போலவும்

சிவபெருமான் முப்புரங்களை எரித்த போது வளைத்த மகாமேரு மலை போலவும்

குபேரனது புஷ்பக விமானம் போலவும்

பல வடிவங்களால் நாவாய்களின் தோற்றம் காணப்படுகின்றது.

.....

.....

.....

.....

.....

.....

ஆ) கம்பர் பரதனது சேனை கங்கையைக் கடந்த விதத்தினை வர்ணிக்கும் பாங்கு.

அரச மரபுப்படி அவரவர்க்குரிய முறை தவறாமல் நாவாய்களில் சேனைகள் ஏற்றப்பட்டன.

காலாற்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை ஆகிய நாற்படைகளும் கங்கையைக் கடந்தன.

கூட்டமான மேகங்கள் மோதுவதால் உண்டாகும் முழக்கம் போலவும், பிரளய காலத்தில் கடல் நீரை அடியோடு வற்ற உண்பதற்கு நெருங்குவது போலவும் கொடியோடு கூடிய கப்பல்கள் பாய்மரத்துடன் செல்வது போலவும் யானைகள் நீண்ட துதிக்கைகளை உயரத் துக்கி கங்கை நதியை நீந்திச் சென்றன.

கங்கை நதி நீர்ப்பெருக்கெடுத்தது என்பதை யானைகளின் உந்துதலால் சங்கு, சுறாமின், முத்து, மாணிக்கம் போன்றவற்றைத் தள்ளியபடி மரக்கலங்களை கடலும் தனது நீரினை கங்கையில் பரவச் செய்தது.

www.ikeau.lk

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

5. **கம்பராமாணம் 54-72 பாடல்களை ஆதாரமாகக் கொண்டு கீழ் வருவனவற்றிற்கு விடையளிக்குக.**

அ) மகளிர் ஓடத்தில் செல்லும் காட்சி வர்ணனை.
ஆ) பரதன் தாயாரை அறிமுகப்படுத்திய விதம்
இ) பரத்துவாச முனிவர் பற்றிய சித்தரிப்பு

அ) மகளிர் ஓடத்தில் செல்லும் காட்சி வர்ணனை.

தளிர் போன்ற மென்மையான கைகளையுடைய பெண்கள் நெருக்கித் தள்ளுதலால் அவர்களது மார்பகங்கள் பெரிய யானைகள் வரிசையில் தம் அழகிய தந்தங்களால் குத்துவதற்கு நெருங்கியது போலக் காணப்பட்டன.

கலங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதைக் கண்டு கலங்கும் பெண்களின் கண்கள் ஆற்று நீர் அங்கும் இங்கும் கலங்குவதால் பயந்த துள்ளுகின்ற கயல்மீன் கூட்டத்தைப் போன்றிருந்தது.

.....
.....
.....
.....
.....
.....
.....
.....

ஆ) பரதன் தாயாரை அறிமுகப்படுத்திய விதம்

கோசலை

கோக்கள் வைகும் முற்றத்தான் முதல் தேவி
மூன்றுலகும் ஈன்றானை முன் ஈன்றான்
யான் பிறத்தலால் பெரும் செல்வம் இழந்த பெரியாள்.

சுமித்திரை

நெறி திறம்பா தன் மெய்யை நிற்பதாக்கி இறந்தான் தன் இளம் தேவி
இலண்கமணனைப் பெற்ற பெரியாள்.

கைகேயி

படர் எல்லாம் படைத்தாள்
பழி வளர்க்கும் செவிலி
பரதனை பிறவிக் குடரிலே சுமந்தவள்
இடர் இலா முகத்தாள்

இ) பரத்தவாச முனிவர் பற்றிய சித்தரிப்பு

பரத்துவாச முனிவர் பற்றிய சித்தரிப்பு
வினைச்சுமை பற்றினை நீங்கியவர்.
தவ வலிமையில் சிறந்தவர்.
ஆற்றலினால் உயர்ந்த முனிவர்
அந்தணர்கள் சூழ வாழ்பவர்.

எதிர்பார்க்கக்கூடிய பிற வினாக்கள்

1) கம்பரின் கவித்துவம்
2) பரதனின் குணப்பண்பு
3) குகனின் குணப்பண்ப
4) கைகேயின் குணப்பண்பு
5) தசரதனின் குணப்பண்பு
6) சுமந்திரன் எனும் பாத்திரத்தின் சித்தரிப்பு
7) குகன் இராமன் மீது கொண்ட அன்பு
8) பரதனின் நிலை கண்ட குகனது கழிவிரக்கம்.

எதிர்பார்க்கக்கூடிய பாடலடிகள்.

பாடல் 26 :- கற்காணும் திண்மையான்.....
30 :- நம்பியும் என் நாயகனை.....
33 :- தழுவின் புளிஞர் வேந்தன்.....
35 :- தாய் உரைகொண்டு .....
42 :- அல்லை ஆண்டு அமைந்த மேனி.....
49 :- இடிபடு முழக்கம் பொங்க.....
52 :- கொடிஞ்சோடு தட்டும் அச்சும்.....
55 :- பொலங் குழை மகளிர்.....
58 :- அகில் இடு தூபம் அன்ன .....
59 :- ஆனனம் கமலத்து அன்ன.....
60 :- துளிபடத் துழாவு தாண் கோல்.....
65 :- என்றலுமே அடியின் மிசை .....
69 :- படர் எலாம் படைத்தாளை .....

www.lkedu.lk

வினா இல : 05. தேம்பாவணி– 20 புள்ளிகள் (தெரிவு வினா)

1. காட்சிப் படலத்தினூடாக முன்வைக்கப்படும் இயேசுநாதரின் புகழ்/ பெருமைகள்

மின்னலுக்கிணையான விண்ணக அன்னையாம் மரியாளின் புதல்வன்.
வேதங்களினுடைய தலைவன்.
எண்ணங்கட்கு அப்பாற்பட்ட/ எண்ணித் துணிந்து விட முடியாத மாட்சிமை பூண்டு விண்ணக அரசர்கெல்லாம் அரசர்.
இறைத்தன்மை மிக்கவர் மனிதர் மீது கொண்ட மட்டற்ற அன்பால் மனித அவதாரம் எடுத்தவர்.
ஒளிமயமான வானுலகில் வாழும் வானவரும் வணங்கும் கடவுள்.
தெளிந்த தேனுக்கு ஒப்பான இனிய அன்பு கொண்ட மன்னன்.
மாணிக்கப் பாத்திரத்தில் இட்ட தேவாமிர்தம் போன்ற மார்பினை உடையவன்
ஒரு தனிச் செங்கோலினால் இவ் உலகங்களை ஆளும் அரசனாகிய ஆண்டவன்.
இவ்வுலகை ஆளும் அரசர்கள் எல்லாம் அவன் முன் அஞ்சி நடுங்குவர்.
சொற்களுக்கு அப்பாற்பட்ட ஆண்டவர்.
யாரையும் வெல்லத்தக்ககொடையில் சிறந்தவள்.
ஊழிக்காலத்தில் அமில மழையும நெருப்பும் மழையும் பொழிந்து வந்து பாவப்பட்ட நகரங்களை எரித்தழித்தவர்.
முடிவு என்று எதுவுமில்லாதவன்.

2. காட்சிப் படலத்தினூடாக வெளிப்பட்டு நிற்கும் இடையர்களின் பக்தி:-

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

3. காட்சிப் படலத்தினூடாக வெளிப்பட்டு நிற்கும் மரியாளின் பெருமைகள்:-

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

www.lkedu.lk

4. காட்சிப் படலத்தினூடாக வெளிப்படுத்தப்படும் சூசையின் சிறப்பு :-

திருக்குழந்தையாகிய இயேசுவுக்கும் மரியாளுக்கும் சிறந்த காவலனாக விளங்கியவர்.
இடையர்கள், இடைச்சியர்களாக வாழ்த்தப்பட்டவர்.
வேத உருவிலான மாட்சிமை பூண்ட மரியாளின் துணைவன்.
பெரும் தவத்து வடிவில் தோன்றிய மன்னவன்.
இயேசுவை வளர்தெடுக்கும் தந்தையாக தெரிந்தெடுக்கப்பட்டார்.

5. காட்சிப் படலத்தில் இடம்பெறும் சாந்தி - மரியாள் உரையாடல் மூலம் சாந்திக்கேற்பட்ட சந்தேகங்களாக கூறப்படுபவை யாவை?

முக்காலங்களையும் அறிந்த இறைவன் வானில் இருந்து அரசு செய்யும் வல்லமையுடையவன் ஏன் இவ்வுலகில் மனிதனாக வந்து பிறந்தார்.
இன்பங்களை அளிக்கும் வள்ளலாம் இறைமகன் துன்பங்களை விரும்பி ஏற்று எளிமைக் கோலத்தில் பிறந்தது ஏன்?
வேல், வாள், வில், சக்கரம் முதலான படைக்கலங்களுடன் ஒரு அரசனுக்குச் சேவகம் புரியும் படையணி, இந்த மன்னனுக்கு இல்லாமல் போனது ஏன்?
அரசர்கள் தங்கள் தோற்றப் பொழிவை அழகுபடுத்த அணியும் மணிகள் பதித்த பட்டாடையும், பொன்னாலான அணிகலன்களும் இன்னும் பிற செல்வங்களும் அரசாளும் மாடமாளிகைகளும் ஆகியவற்றுள் ஒன்றேனும் இருவருக்கு இல்லாதிருப்பது ஏன்?
பிறப்பதற்கு மாட மாளிகை இன்றி மாட்டுத் தொழுவத்தில் வந்து பிறந்தது ஏன்?
இறைவன் மனிதராக அவதாரம் எடுத்து மானிடர் மேலுள்ள அன்பால் அவர்களை மீட்க மனித அவதாரம் எடுத்தாரென்றால் கடவுளுக்குரிய உருவில் தோன்றாமல் விட்டது ஏன்?
தனியரசு செய்யக்கூடிய வல்லமை படைத்தவரெனில் அதிகாரம் ஆட்சிக்குரிய எந்த அடையாளங்களும் இன்றி ஏழ்மையாய் வந்தது ஏன்?
உலகை ஆளும் அரசர்களும் இன்னும் உள்ள எல்லோரும் அவருக்கு அஞ்சுவார்கள் என்றும், அவரை வணங்குவோர் மட்டுமே உயிர் வாழ்வார் என்றும் வேதம் கூறுகின்றதே இது எவ்வாறு நிகழும்?

5. சாந்தியின் வினாக்களுக்கு மரியாளின் பதில்களைக் குறிப்பிடுக.

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

5. காட்சிப் படலத்தின் மூலம் எடுத்துக்காட்டப்படும் இடையர்களின் பண்புகளும் வாழ்வு முறைகளையும் எடுத்துக்காட்டுக?

.....
.....
.....
.....
.....
.....
.....

5. தேம்பாவணி காட்சிப்படலத்தில் வீரமா முனிவர் கையாண்ட பாக்கள், அணிகளைக் குறிப்பிடுக.

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

5. தேம்பாவணி காட்சிப்படலத்தில் வீரமா முனிவர் கையாண்டுள்ள அணிச் சிறப்பினைக் குறிப்பிடுக.

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

www.lkedu.lk

வினா இல : 05. சிலப்பதிகாரம்– 20 புள்ளிகள் தெரிவு வினா

01. கோவலன் தன் நிலமை பற்றி கவுந்தியடிகளிடம் கூறியவை எவை?

செய் தவத்தீர் என கவுந்தியடிகளை விளித்து கூறத் தொடங்குதல்.
கோவலன் கவுந்தியடிகளை கைகூப்பி வணங்கி நான் நல்லொழுக்க வழியினின்று தவறிய தன்மையுடையவன் ஆயினேன்.
அழகிய மலர் போலும் மென்மையான உடலினையுடைய கண்ணகியை முன்னர் அறிந்திராதர நாட்டின் தொல்லை மிகுந்த வழிகளிலெல்லாம் அமையச் செய்தவனாவேன்.
கண்ணகியை விட்டுப் பிரிந்தமையும் பிரிந்தமையால் கண்ணகி அடைந்த துயருக்கும் நானே காரணம் என்ற வகையால் சிறுமையான செயல் புரிந்தவன் எனக் கூறல்.
மதுரை நகர் சென்று பெரு வணிகர்க்கு என் நிலையைத் தெரிவித்து வணிகம் செய்வதற்கு பொருத்தமான இடம் அறிந்து வரும் வரை கண்ணகி தங்களின் பாதுகாப்பில் இருக்கட்டும் எனல்.

2. கோவலனை கவுந்தியடிகள் எவ்வாறு தேற்றுகின்றார் - கோவலனுக்கு கவுந்தி அடிகள் கூறியவை எவை?

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

3. கண்ணகியின் சிறப்புக்களாக கூறப்பட்டள்ளவை எவை?

வாசனை மிகுந்த அழகிய மலர் போன்ற மென்மையான உடலினையுடையவள்.
பசுமையான ஆபரணங்களை அணிந்தவள்.
ஆராய்ந்தெடுக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்தவள்.

4. துன்பத்தை அடைபவர்களாக கூறப்பட்டு இருப்பவர்கள் யாவர்?

மகளிரைப் பிரிந்து வாழ்வோர்.
அவர்களைச் சேர்ந்து வாழ்வோர்.
மகளிரும் உணவுமே இன்பம் தரும் பொருளாக கருதி வாழ்வோர்.
அறநெறியின் நன்மையினை அறியாத அறிவு என்னும் உறுதியற்றவர்கள்.
காமத்தையே பற்றுக்கோடாகக் கொண்டு மூழ்கியிருப்பவர்கள்.

5. அணிப்பயன்பாடு

1. உவமையணி :- நறுமலர்மேனி
   உவமானம் :- நறுமலர்
   உவமேயம் :- கண்ணகியின் மேனி
   பொதுத்தன்மை:- மென்மையும் அழகும்

2. உருவக அணி:- நாக்கடிப்பு - நாக்கு குறுந்தடியாக உருவகிக்கப்பட்டுள்ளது.
   வாய்ப்பறை - வாய் பறையாக உருவகிக்கப்பட்டுள்ளது.

www.lkedu.lk

வினா இல : 05. மணிமேகலை– 20 புள்ளிகள் தெரிவு வினா

1. மணிமேகலை காப்பியத்தில் மணிமேகலாத் தெய்வம் தோன்றிய காதையால் அந்திப் பொழுதின் காட்சிகளாக குறிப்பிடப்பட்டிருப்பவை எவை?

நாள் முதிர்ந்த பூரண சந்திரன் கீழ்த்திசையாலும் மறைகின்ற செங்கதிரோன் திசையாலும் காணப்படல்.
அன்னப்பேட்டினை தாமரை மலர் குவிந்து மூடிக் கொள்ள அன்னச் சேவலானது பூம்பொதியை சிதைத்து பேட்டை மீட்டுக் கொண்டு உயர்ந்த தென்னை மர ஓலையில் ஏறியிருத்தல்.
அன்றிலின் பேடானது மெல்லிய குரலில் தன் சேவலுக்கு மறைகின்ற அந்திப் பொழுது பற்றி எடுத்துக்கூறல்.
குவளை மலர்கள் நிறைந்த இடங்களில் அன்னப்பறவைகள் மிகுதியாகக் காணப்படல்.
குவளை மலர்களை மேய்ந்த செவ்விய பசுக்கள் பொழிகின்ற பாலானது அவை நடந்து செல்வதால் எழுகின்ற புழுதியை தணித்தல்.
சூரியனாகிய தன் கணவனை இழந்த வருத்தத்துடன் அவன் காதலியான அந்தியானவள் பசளையடைந்த மேனியனாகிய புகார் நகரத்தில் வந்து தங்கல்.
தமது இல்லத் தொழுவங்கள் நோக்கித் திரும்பும் பசுக்கள் தம் கன்றுகளை நினைத்தமையால் குரல் எழுப்பியவாறு செல்லல்.
அந்தணர்கள் வழிபாட்டுக்குச் சடங்கிற்காக வேள்வித் தீ வளர்த்தல்
இல்லுறை மகளிர் தத்தம் இல்லங்களில் விளக்கேற்றுதல்.
பாணர்கள் யாழினை மீட்டி மருதப் பண்ணினை இசைத்தல்.
மந்தை மேய்க்கும் இடையர்கள் புல்லாங்குழலில் வாய் வைத்து முல்லைப்பண் இசைத்தல்.

2. மணிமேகலாத் தெய்வம் தோன்றிய காதையில் காட்டப்பட்டிருக்கும் புகார் நகர் பற்றிய வர்ணனை.

சூரியனை தலைவனாகவும் புகார் நகரத்தை தலைவியாகவும் வர்ணித்துள்ளமை.
புகார் நகரத்தின் கீழ்திசையில் சந்திரோதயமும் மேற்குத் திசையில் சூரிய அஸ்தமனமும் ஒரே வேளையில் வெள்ளி வெண் தோடாகவும் பொற்றோடாகவும் காட்டப்படல்/ வர்ணித்தல்.
சூரியன் மறைதலை போர்களத்தில் வீரமரணம் அடைந்தவனுக்கு வர்ணித்து (ஒப்பிட்டு) கூறப்படல்.

3. இப் பகுதியில் கையாளப்பட்டுள்ள அணிகள் எவை?

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

www.lkedu.lk

வினா இல : 05. ஏனையவை – 20 புள்ளிகள் தெரிவு வினா

2.காரணமாலை (திருமக்க நாட்டுச் சிறப்பு)

I. மக்கா திருநாட்டின் இயற்கை அழகு

II. மக்காவின் அருட்சிறப்பு

III. மக்காவின் அற்புதங்கள்

IV. இப்பகுதியில் காணப்படும் அணிகள்

5.திருவாசகம் (கோயில் திருப்பதிகம்)

I. சிவபெருமானைப் பற்றி மாணிக்கவாசகர் கூறியுள்ள விடயங்கள்

II. இறைவனது இயல்புகள்

III. இப்பகுதியில் வெளிப்படும் பக்தியின் உன்னத நிலை

IV. எடுத்துரைப்பு முறை உத்திகள்

6.ஆழ்வார் பாடல் (அமலன் ஆதிபிரான்)

I. விஷ்ணுவின் திருக்கோல அழகில் திருப்பாணாழ்வார் தன்னை பறிகொடுத்த தன்மை

II. விஷ்ணுவினதும் திருவரங்கத்தினதும் சிறப்புகள்

III. இப்பகுதியில் இடம்பெறும் இதிகாச புராண சம்பவங்கள்

IV. தன்னை இறைவன் ஆட்கொண்டமை பற்றி ஆழ்வார் கூறியவை

V. பல்லவர்கால பக்தி இலக்கிய பண்பு வெளிப்படுமாறு

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

www.lkedu.lk

வினா இல : 06. கட்டுரைகள் – 20 புள்ளிகள் தெரிவு வினா

1.பேராசிரியர் கைலாசபதியின் மானுடம் தழுவிய கவிஞர்கள்

I. கட்டுரையின் பிரதான கருப்பொருள்

II. பாரதி பற்றிய பேராசிரியரின் மதிப்பீடு

III. பாரதியினை பெருங்கவிஞர்கள் வரிசையில் வைத்து நோக்கப்படுவதற்கான காரணங்கள்

IV. கவிஞனின் பொது இலக்கணம் பற்றிய கருத்துக்கள்.

V. பெரும் கவிஞர்கள் பற்றிய கட்டுரை ஆசிரியரின் வரையறை

VI. மானுடம் தழுவிய கவிஞர்கள் - காரணங்கள்

VII. கட்டுரை ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பு

2.சு.நடேசபிள்ளையின் இலங்கையாற்றுப்படை

I. இக்கட்டுரையின் பிரதான கருப்பொருள்

II. கட்டுரை வெளிப்படுத்தும் இருவகை சான்றுகள்

III. இராமாணயத்தில் குறிப்பிடப்படும் லங்காபுரி - இலங்கை - வரலாற்று ஆதாரங்கள்

IV. லங்காபுரி இலங்கையே என்பதற்கான இலக்கிய ஆதாரங்கள்

V. லங்காபுரியின் அமைவிடம் தொடர்பான செய்திகள்

www.lkedu.lk

வினா இல : 06. கட்டுரைகள் – 20 புள்ளிகள் தெரிவு வினா

3.புதுமைப்பித்தனின் தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை

I. கட்டுரையின் பிரதான கருத்தும் துணைகருத்தும்
II. நாகரிகத்தின் உயிர்ப்புக்கு கிராமங்களின் அவசியம்
III. கிராமத்தவரின் வாழ்வியல் முறைகள்
IV. கிராம வாழ்க்கையில் நாகரிகத்தின் இடம்
V. கிராம வாழ்க்கைக்கும் நகரவாழ்க்கைக்கும் இடையிலான வேறுபாடுகள்
VI. கட்டுரை ஆசிரியரின் கதை சொல்லும் பாங்கு
VII. கட்டுரை ஆசிரியரின் மொழிநடை

4.சுவாமி விபுலாநந்தரின் தமிழ்த்தொண்டு

I. தமிழ்மொழிக்கு ஆற்றவேண்டிய தொண்டுகள்
II. பாரதி பற்றிய விபுலாநந்தரின் மனப்பதிவு
III. தமிழ்மொழி பற்றிய விபுலாநந்தரின் மனப்பதிவு
IV. வடமொழி நூல்களை மொழிபெயர்த்தல் தொடர்பான கருத்துக்கள்.
V. கட்டுரை ஆசிரியரின் மொழிநடை

www.lkedu.lk

வினா இல : 07. சிறுகதைகள் – 20 புள்ளிகள் தெரிவு வினா

1.எனக்கு வயது 13

I. போடியார் வீட்டில் சல்மா படும் அசௌகரியங்கள், உள்ளக் குமுறல்கள்

II. இக்கதையில் போடியாரின் மனைவி, சல்மாவின் தாயார் பெரும் முக்கியத்துவம்.

III. பிரதான கதாபாத்திரத்தின் சித்திரிப்பு சிறப்பு

IV. கிழக்கு முஸ்லிம்களின் மண்வாசனை வெளிப்படல்.

V. கதாசிரியரின் படைப்பாக்கத் திறனும் மொழிநடையும்.

2.கூத்து

I. நாகத்தை, நாகண்டா போடி ஆகியோரின் குணப்புகள்

II. கூத்துக்குரிய நடைமுறைகளாக குறிப்பிடப்படுவன

III. சரவணமுத்து எனும் பாத்திரம் பெறும் முக்கியத்துவம்

IV. இச்சிறுகதையில் காணப்படும் பண்பாட்டு அம்சங்கள்

V. கூத்து நடைப்பெறும் முறைப்பற்றிய சித்திரிப்பு

VI. கதாசிரியரின் மொழிநடைச் சிறப்பு

www.lkedu.lk

வினா இல : 07. சிறுகதைகள் – 20 புள்ளிகள் தெரிவு வினா

3.நெருக்கடி

I. சரவணமுத்துவின் குணாம்சங்கள்
II. இன்ஸ்பெக்டர் பாத்திரம் பெறும் முக்கியத்துவம்
III. சரவணமுத்துவின் ஏழ்மை நிலை சித்திரிப்பு
IV. நெருக்கடி எனும் தலைப்பின் பொருத்தப்பாடு
V. கதாசிரியர் கையாண்டுள்ள உத்தி முறைகள்
VI. கதாசிரியரின் மொழி நடைச் சிறப்பு

4.தேர்

I. பாத்திரம் குணவியல்புகள்

ஆறுமுகத்தார்
மனோகரன்
பத்மா
குமாரசாமி

II. இச்சிறுகதையின் அச்சாணியாக முகத்தார் விளங்குமாறு
III. யாழ்ப்பாணத்து மக்களின் பண்பாட்டு வாழ்வியல் அம்சங்கள் வெளிபடல்
IV. தேர் என்னும் தலைப்பின் பொருத்தப்பாடு
V. தேர் - கதைப்பின்னல்
VI. எஸ் பொவின் மொழிநடைச் சிறப்பு

www.lkedu.lk

வினா இல : 07. நாடகம் – 20 புள்ளிகள் தெரிவு வினா

இரு துயரங்கள்

I. நாடகத்தின் கதைச் சுருக்கம்
II. நாடகத்தின் கதை, களம், பொருள்
III. கந்தப்பு, மனோகரன் ஆகிய பாத்திரங்களின் பண்புகள்
IV. ஆர்வத்தூண்டல், முன்குறிகாட்டல்.
V. நாடகத்தின் எதிர்த்திருப்பம்
VI. பாத்திரப் பண்பு மாற்றம்
VII. நாடகத்தின் மொழிநடைச் செம்மை
VIII. பாத்திர முரண்பாடு நாடகத்தை வளர்த்தச் செல்ல உதவும் விதம்
IX. சுவையும் தரமும் நிறைந்த நாடகமே இரு துயரங்கள்

வினா இல : 07. நாவல் – 20 புள்ளிகள் தெரிவு வினா

ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது

I. கிராமிய வாழ்வியல் அம்சங்கள்
II. நாட்டாரியல் பண்பாட்டு கோலங்கள்
III. நாவலாசிரியரின் மொழிநடைப் பிரயோகம்
IV. கதைக்களம்
V. கதைப்பின்னல்
VI. கிராமத்து மக்களின் ஏழ்மையும் உழைப்பும்
VII. பெண்களின் கல்வி முன்னேற்றம், கிராமத்தை முன்னேற்றம் அடைய செய்தல் என்பவற்றில் ஆசிரியரின் பங்கு
VIII. கதாபாத்திரங்களின் சித்தரிப்பு - தாமோதரன், சவுந்தரம், தலைமையாசிரியர், தெய்வாணை, மயில்வாகனம், நாகேந்திரம்
IX. தலைப்பின் பொருத்தப்பாடு

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

www.lkedu.lk

வினா இல : 08. சிறுகுறிப்பு – 20 புள்ளிகள் தெரிவு வினா

www.lkedu.lk